# 70 தானியங்கி மெட்ரோ ரயில் சி.எம்.ஆர்.எல்., ஒப்பந்தம்

**சென்னை, ஜூலை 29–** சென்னையில், ஓட்டுனர் இன்றி தானாக இயங்கும், 70 மெட்ரோ ரயில்களை வாங்குவதற்கான டெண்டர் நடவடிக்கைகளை, சி.எம்.ஆர்.எல்., துவக்கி உள்ளது.

சென்னையில் இரண்டாம் கட்டமாக, 118.9 கி.மீ., தொலைவுக்கு, மூன்று வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மொத்தம், 61 ஆயிரத்து 843 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதற்கான கட்டுமான பணிகள் துவங்கி உள்ளன.

சென்னையில் தற்போது, ஓட்டுனர்கள் வாயிலாக மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இதன் அடுத்த கட்டமாக, ஓட்டுனர் இல்லாத, தானியங்கி ரயில்களை வாங்க, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதில், முதல் தவணையாக, 70 ரயில்களுக்கான



பெட்டிகள் வாங்கப்பட உள்ளன.

'எலட்ரிக் மல்டிபிள் யூனிட்' என்ற பெயரில், ஓட்டுனர் இன்றி இயக்குவதற்கு ஏற்ற, நான்காவது கிரேட் நிலையில், 210 பெட்டிகள் வாங்க, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முறையான டெண்டர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அடுத்த சில ஆண்டுகளில், சென்னையில், தானியங்கி மெட்ரோ ரயில்கள் இயக்கவுள்ளன.